# தி.மு.க. இனி அடித்து ஆடும் காத்திரு பகையே!




அவர் எப்பொழுதுமே தன் வார்த்தைகளுக்கு மிக நேர்மையானவராகவே இருந்திருக்கின்றார். ஒரு மாநாட்டில் அவர் ஆற்றிய உரையில் சனாதனம் பற்றி, அதற்கு எதிரான தன்னுடைய கருத்துக்களை மிகப் பலமாக பதிவு செய்கின்றார். அது ஒட்டுமொத்த இந்து மதவாதிகளின் கடும் எதிர்ப்பையும், அதிர்வையும் இந்தியா முழுமைக்கும் ஏற்படுத்துகின்றது.

பா.ஜ.க. பெருந்தலைகள், ஒன்றிய அமைச்சர்கள், மடாதிபதிகள் என்று பெரும் படையே அவர் மீது போர் தொடுக்கின்றது. சிலர் அவர் தலைக்கும் விலை வைக்கின்றனர். அந்த நேரத்தில் கூட அவர் தன் வார்த்தைகளுக்கு மிக நேர்மையானவராகவே இருந்தார். தான் சொன்னதில் எந்த தவறும் இல்லை. உண்மையைத் தான் சொன்னேன். சனாதனம் சமூகநீதிக்கு எதிரானது, வள்ளுவர் கூறிய “பிறப்பொக்கும்” என்ற சமத்துவத்திற்கு நேர் எதிரானது... ஆண்டான் அடிமைத்தனத்தை ஊக்குவிப்பது... லப் லப் லப் என்று தன் வார்த்தைகளுக்கு அவர் மேலும் மேலும் வலுச்சேர்த்துக் கொண்டே இருந்தாரே ஒழிய தான் பேசியது தவறு என்று அவர் ஏற்றுக்கொள்ளவே இல்லை.

காரணம், தான் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக... அவர்கள் உயர்த்தப்பட்ட மக்களுக்கு இணையாக எந்த பாகுபாடும் இன்றி சரிசமமாக வாழ வேண்டும் என்பதற்காவே பேசுகின்றேன் என்ற அறம் சார்ந்த மனதோடு பேசியதால் தான் அவர் தன் வார்த்தைகளுக்கு நேர்மை காட்டினார்.

இப்பொழுதும் கூட காவிரிப் பிரச்சினைக்காக காவிரியில் வரவேண்டிய தண்ணீர் ஐம்பது நாட்களைக் கடந்தும் வராத நிலையில், அது பற்றிய எந்த கவலையோ, அக்கறையோ இன்றி இந்த தவெக அரசு தாந்தோன்றித்தனமாய், செயல்பட்டுக் கொண்டிருப்பதை எண்ணி, ஆடிப் பெருக்கு நாளன்று தஞ்சையில் ஒரு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்து அங்கே செல்கிறார்.

நியாயமாக இந்தப் போராட்டங்களை கம்யூனிஸ்ட் கட்சிகளோ, வி.சி.க.வோ, ம.தி.மு.க.வோ தான் முன்னெடுத்திருக்க வேண்டும். காரணம் அவர்கள்தான், தங்களை உத்தம சிகாமணிகளாகவும், எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் மக்கள் நலனே தங்கள் சுவாசம் என்றெல்லாம் தங்களை தாங்களே ஆராதித்துக் கொண்டிருப்பவர்கள்.

ஆனால் அவர்கள் அனைவரும் வாய் மூடி மௌனியாக இருக்கின்ற நிலையில் தான் இந்த போராட்டத்திற்கு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுக்கின்றார்.

அங்கே பல்லாயிரக்கணக்கில், பல்வேறு விவசாயச் சங்கங்களைச் சார்ந்த விவசாயிகளும், தி.மு.க. தொண்டர்களும் கூடி நிற்கின்றனர். விவசாய சங்கங்களின் தலைவர்கள், பல்வேறு தோழமைக் கட்சித் தலைவர்கள் எல்லாம் காவிரி விவகாரத்தில் இன்றைக்கு தமிழ்நாடு ஏமாற்றப்பட்டிருப்பதையும், அதை இந்த அரசு புரிந்துகொள்ளாமல் சுயநலமாக அரசியல் செய்வதையும் எடுத்துக்கூறி, பல்வேறு ஆதாரங்களையும், புள்ளி விவரங்களை எடுத்துப் போடுகின்றனர்.

நிறைவாக தமிழ்நாடு அரசின் எதிர்க்கட்சித் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒலிபெருக்கியைப் பிடிக்கிறார்.

இருபத்தைந்து நிமிடங்கள் அற்புதமான உரை. அத்தனையும் தரவுகள், புள்ளி விவரங்களுடன்.... நடந்தது, நடந்து கொண்டிருப்பது, நடக்கப் போவது என்று பேசிவிட்டு... என்ன நடந்திருக்க வேண்டும்? அதை எப்படி சாதித்திருக்க வேண்டும்? என்பதையெல்லாம் தெளிவாகப் பட்டியலிடுகின்றார்.



**சௌமியன் வைத்தியநாதன்**
*கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்*

அதற்கு முன்பாக இப்பொழுது இருக்கும் அமைச்சர்கள் பற்றிய தராதரங்களை, அவர்கள் செய்த, செய்து கொண்டிருக்கின்ற செயல்களை வைத்தே சரமாரியாக விளாசித் தள்ளுகிறார். முதல்வர் விஜய்யின் முட்டாள் தனங்களை பட்டியலிட்டு கையாலாகாதத் தனத்தை புட்டுப் புட்டு வைக்கின்றார்.

கூட்டம் ஆர்ப்பரிக்கின்றது... எங்களுக்கு சரியான நேரத்தில், சரியான அளவு தண்ணீர் வேண்டும்... முப்பதாண்டுகால சட்டப் போராட்டம் நடத்தி இதைப் பெற்றிருக்கின்றோம் என்கிறார். எதிரே உணர்ச்சிவயப்பட்ட நிலையில் நின்றிருந்த தொண்டர்களில் சிலர் ஒரு நடிகையின் பெயரைக் குறிப்பிட்டு கூச்சலிடுகின்றனர்.

இவரோ உணர்ச்சிகரமாக பேசிக் கொண்டிருக்கின்றார். அவர்கள் என்ன கூச்சல் இடுகின்றார்கள் என்று ஒரு வினாடி நிறுத்திக் கேட்கிறார். அவர்கள் மீண்டும் அந்தப் பெண்ணின் பெயரைச் சொல்லி கூச்சலிடுகின்றனர். அவர் அதைக் கேட்டுவிட்டு, மெல்லச் சிரித்தவாறே நான் காவிரித் தண்ணீர் பற்றித் தான் பேசுகிறேன் என்று மீண்டும் அவர்கள் கூச்சலைக் கட்டுப்படுத்தி காவிரிப் பிரச்சினைக்குள் வந்து பேசுகிறார்.

அவர் பேசியதில் ஏதேனும் ஒரே ஒரு வார்த்தை அச்சில் ஏற்ற இயலாததோ, சட்டமன்றத்தில் பேச இயலாததோ, பொது வெளியில் பேசக் கூடாததோ அல்லது ஆபாசமானதாகவோ இருந்தால், அவரை விமர்சிக்கும் கூட்டம் அதை தெளிவாகச் சொல்ல வேண்டும்.

தி.மு.க. மீதான வன்மமும், அது வீழ்ந்து விட்டது இனி எழ முடியாது என்று நம்பிக்கொண்டிருந்த வேளையில், இளம் தலைவர் ஒருவர் அங்கிருந்து நானிருக்கின்றேன் திமுகவை அடுத்த கால் நூற்றாண்டுகளுக்கு தூக்கிப் பிடிக்க என்று கர்ஜித்து எழும் நேரத்தில்

வன்மவாதிகளின் நஞ்சு மனம் எடுத்த வாந்திகள் தான் திரு உதயநிதி ஸ்டாலின் மீதான இந்த ஒரு நாள் விமர்சனம்.

நான் அவர்கள் இப்படிப் பேசவில்லையா? இவர்கள் இப்படிப் பேசவில்லையா? என்றெல்லாம் கேட்டு உதயநிதி பேசியதற்கு முட்டுக்கொடுக்க தயாராக இல்லை. காரணம், அப்படியெல்லம் அவர்கள், இவர்கள் பேசியது போல் எல்லாம் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எதுவும் தவறாகப் பேசவேயில்லை. அவர் பேசியது எல்லாம், காவிரியில் நீர் வராமல் போனதும், அதனால் டெல்ட்டா வறண்டு கிடப்பதும், அதற்கு எப்படி முதல்வர் விஜய் பொறுப்பு என்பது பற்றியும் தான் பேசினார். விரைவாக அங்கே தண்ணீர் கிடைப்பதற்காக அரசுக்கு அழுத்தம் கொடுத்தார். அவர் ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவராக, முக்கால் நூற்றாண்டு இயக்கத்தின் இளம் தலைவராக தனது கடமையை மிகச் சரியாகத்தான் செய்திருந்தார்.

அந்த பேச்சை நேரடியாகக் கேட்டு கலைந்து சென்ற எலோருமே, நிச்சயம் விஜய் வழிக்கு வந்து நியாயமான நடவடிக்கைகள் எடுத்து காவிரியில் தண்ணீர் கொண்டு வந்து விடுவார் என்று விவாதித்தவாறே தான் சென்று கொண்டிருந்தனர்.

இந்த வீச்சு டெல்ட்டா விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடம் நல்ல நேர்மறையாக பற்றத் துவங்கிய நிலையில் தான் திடீரென ஆபாசமாகப் பேசினார், ஒரு நடிகையைப் பற்றிப் பேசினார் என்று மதியத்திற்கு மேல் ஒரு நரேடிவ் ரீல்ஸ் வெளியாகி, அது வைரலாகி விவரமே தெரியாமல் சிலர் பொங்க அடுத்தநாள் உதயநிதி ஸ்டாலின் அரெஸ்ட் 400 கிலோ மீட்டர் ஊர்வலம், திமுகவினரின் எழுச்சிப் போராட்டங்கள் கைது படலங்கள் தஞ்சை நகரம் திமுகவினரின் முற்றுகையால் திக்குமுக்காடிப் போனது எல்லாம் நடந்தேறியது!

விஜய் தவறாக நினைத்து விட்டார். இவர் பார்ன் வித் கோல்டன் ஸ்பூன், 10 மணி நேரம் போலீஸ் வேனில் ஃப்ளாட் சீட்டில், ஏசி இல்லாமல், இடுப்பு ஒடிய ஒடிய தடால் புடால் என்று குதித்துக் குதித்துச் செல்லும் வாகனத்தில் ஏற்றி சுற்றினால் பயந்து பம்மி விடுவார் என்று!

ஆனால் நடந்த கதையோ வேறு! அவர் வீட்டில் போலீஸ் முற்றுகையிட்ட உடனேயே... தமிழ்நாடு முழுவதும் உள்ள தி.மு.க.வினர் அரக்கப் பறக்க தத்தமது ஒன்றிய, நகர, மாநகர பகுதிகளில் திரண்டு ஆர்ப்பாட்டம், போராட்டம் எல்லாம் நடத்தி... அவர்களை போலீஸார் கைது செய்து கொண்டே இருக்க.

தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட லட்சக்கணக்கானோர் இப்படிக் கைதாகி பல்வேறு திருமண மண்டபங்களில் அடைக்கப்பட உதயநிதியை அழைத்து வந்த வாகனம் வரும் வழிகளில் எல்லாம் அது பை பாஸ் சாலையாக இருந்த நிலையிலும் ஆங்காங்கே கைதாகாத தி.மு.க.வினர் வேனை மறித்து அவருக்கு ஆதரவு தெரிவிக்க... அவர் வாகனத்திற்கு முன்பும் பின்புமாக சில நூற்றுக் கணக்கான வாகனங்கள், பல கிலோ மீட்டர்களுக்கு அணி வகுக்க.

சார் நாம அவரை அரஸ்ட் பண்ணல சார் அவங்க தான் நம்மள அரெஸ்ட் பண்ணி கூட்டிட்டுப் போறாய்ங்கன்னு மேலதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட உளவுத்துறையோ தமிழ்நாடு முழுக்க இதற்காக கைதான தி.மு.க.வினரின் எண்ணிக்கையை மட்டுமல்லாது, அவர்களின் உணர்ச்சிப் பூர்வமான கொந்தளிப்பையும் மேலே பாஸ் செய்து கொண்டே இருந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் கொண்டுவரப்படும் தஞ்சை என்பது கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான தி.மு.க.வினரால் முற்றுகை செய்யப்பட்டது போல, மதியம் பதினோரு மணி துவங்கி தொடர்ந்து கூட்டம் கலையாமல், ஏறிக்கொண்டே செல்ல... தஞ்சை கிழக்கு, தெற்கு காவல் நிலையங்கள் எந்த நேரத்திலும் தகர்க்கப்படலாம் என்ற கொந்தளிப்பான சூழல் ஏற்பட

அவரைச் சுற்றி வளைத்து தஞ்சாவூரிலிருந்து 22 கிமீ தொலைவில் இருக்கும் செங்கிப்பட்டியில் வைத்து விசாரிக்க போலீஸார் முயற்சித்தனர். அவரோ எஃப் ஐ ஆர் போட்ட காவல் நிலையத்தில் தான் என்னை விசாரிக்க வேண்டும், வேறு காவல் நிலையத்தில் விசாரிக்கலாம் என்றால் அதை சென்னையிலேயே வைத்து விசாரித்திருக்கலாமே? ஏன் 9 மணி நேரம் கடந்து இங்கே கொண்டு வந்தீர்கள் என்ற கேள்வியை போலீஸார் கழுத்தில் கொக்கியாக மாட்ட

கையறு நிலையில் ஒட்டுமொத்த ஆட்சி நிர்வாகமும் தலை குனிந்து நிற்க தஞ்சையில் கூடியிருந்த திமுகவினர் செங்கிப்பட்டியை நோக்கி நகர்ந்து அங்கே முற்றுகையிட, போகட்டும் தன்னால் கலவரம் வரவேண்டாம் என்று ஆட்சிக்கு ஏற்பட்ட சிக்கலை தீர்ப்பதற்காகவே திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இறங்கி செங்கிப்பட்டி காவல் நிலையத்திற்குள் சென்று அங்கே ஒன்னரை மணி நேர விசாரணைக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டார்.

கொட்டும் மழையில் வெளியே நின்றிருந்த பல்லாயிரக்கணக்கான தி.மு.க. தொண்டர்களைப் பார்த்து

கைகளை அசைத்தவாறே அவர் வெளியே வந்த பொழுது ஒவ்வொரு தி.மு.க. தொண்டனும் தன்னுடைய அடுத்த தலைவனை அடையாளம் கண்டு கொண்டான்!

அவர் தன் காரில் ஏறி அதிலிருந்தே வெளியே தோன்றி அனைவருக்கும் கை கொடுத்து, வாழ்த்துக்களப் பெற்றவாறே, அடுத்த நாள் சட்டமன்றத்திற்கு செல்வதற்காக ஃப்ளைட் பிடிக்க திருச்சி விமானநிலையம் விரைந்து

அங்கே கூடி நின்ற பத்திரிகையாளர்களிடம் பேசிய பேச்சுத்தான்

இன்றைக்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களிடமும் அவரை ஒரு பலம் மிக்க தலைவராக... ஒரு பேரியக்கத்தை தன் தோள்களில் சுமக்கக் கூடிய அந்த கோடிக்கணக்கான தொண்டர்களை வழிநடத்தக் கூடிய... ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்குமான சமரசமற்ற தலைவனாக உலகிற்குக் காட்டியது!

அவர்கள் எதிர்பார்த்தது, உதயநிதி பயந்து விடுவார், தி.மு.க.வினர் சோர்ந்து முடங்கி விடுவார்கள் என்று! ஆனால் நடந்ததோ உதயநிதி ஸ்டாலின் அடங்க மறுத்து... அத்துமீறாமல்... திருப்பி அடித்துள்ளார் தன் எதிரியை..!

தன் கைவசம் உள்ள சட்டத்தை, அதிகாரத்தை எவ்வளவோ நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தாமல், தன்னையும் தன் இயக்கத்தையும் அழிக்க நினைத்த ஃபாஸிஸ ஆட்சியாளனுக்கு உன்னைப் போல் நான் ஓடி ஒழியவில்லை... இதோ நீ ஓடிய இதே ஏர்போர்ட்டில் இதே பத்திரிகையாளர்களிடம் பேசிக் கொண்டிருக்கின்றேன் என்று தான் ஒரு வார்த்தை கூட தவறாகப் பேசவில்லை என்று அழுத்தம் திருத்தமாக பதிவு செய்தார். தன் வார்த்தைகளுக்கு அவர் என்றுமே நேர்மையானவராகத்தான் இருந்து கொண்டிருக்கின்றார். அவரது நேர்மையான பேச்சு வன்மவாதிகளின் அவதூறுகளையும் கடந்து மெல்ல மெல்ல தமிழ்நாட்டு மக்கள் மனங்களில் அவருக்குக் புதிதான ஒரு இடத்தைத் தந்துள்ளது.

தி.மு.க. இனி அடித்து ஆடும்! காத்திரு பகையே!

## 7 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை,ஆக.7-

வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

சுமார் 5.8 கி.மீ. முதல் 7.6 கி.மீ. உயரம் வரை தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் முதல் லட்சத்தீவு பகுதிகள் வரை தென் தமிழகம் மற்றும் கேரளா வழியாக ஒரு பலவீனமான காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

வட தமிழக கடலோரப்பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது.

ராணிப்பேட்டை, திருவள்ளூர், நீலகிரி மாவட்டங்கள் மற்றும் கோயம்புத்தூர், தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும்.

இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், சேலம், ஈரோடு, திருச்சி, கரூர், மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

# நினைவே நீதானே!



இறந்த பின்னும்
இத்துணை கத்திகள் பாயுமெனில்
எத்துணை பெரியதுன் கொள்கை?

உன் சமாதியையும்
கொலைசெய்யும் ஒரு கூட்டமெனில்
எத்துணை வலியதுன் வாழ்வு?

உன்மீது அடித்த புயல்
மண்மீது அடித்திருந்தால்
இமயமலை சற்றே
இடம் பெயர்ந்திருக்கும்

உன்மீது அடித்த வெயில்
கடல்மீது அடித்திருந்தால்
பாதிச் சமுத்திரம்
பாலையாய்ப் போயிருக்கும்

நீயோ
புயலில் சவாரி செய்தாய்
வெயிலைச் சமாதி செய்தாய்

உன் உறுதியும் தீவிரமும்
இறுதிவரை வேண்டும்
இளைய தலைமுறைக்கு

கலைஞரய்யா!

கல்லறைக்கு
மலரேந்தி வந்தேன்

கண்ணுறக்கம் கலையுமென்று
காம்புகள் கிள்ளி
இதயத்தில் தூவுகிறேன்
இதழ்களை மட்டும்



கவிப்பேரரசு
**வைரமுத்து**

பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை மாற்றியமைப்பது தொடர்பாக

# தமிழ்நாடு அரசிடமிருந்து எந்தவித தகவலும் வரவில்லை!

## மக்களவையில் தயாநிதி மாறன் எம்.பி கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!

சென்னை,ஆக.7-

பரந்தூரில் புதிய விமான நிலையத் திட்டத்தை தொடர்வது, அல்லது திரும்பப்பெறுவது தொடர்பாக தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசுக்கு ஏதேனும் கடிதம் அனுப்பியுள்ளதா? என்றும் இத்திட்டம் குறித்து தமிழ்நாடு அரசுக்கு காலக்கெடுவை நிர்ணயிக்க ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா? என்றும் ஒன்றிய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் கிஞ்சராபுராம் மோகன் அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் வருமாறு:

2026 மே மாதத்திற்குப் பிறகு, பரந்தூரில் முன்மொழியப்பட்டுள்ள புதிய (Greenfield Airport) விமான நிலையத் திட்டத்தை தொடர்வது, மாற்றியமைப்பது அல்லது திரும்பப்பெறுவது தொடர்பாக தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசுக்கு ஏதேனும் தகவல் அல்லது அதிகாரப்பூர்வ கடிதம் அனுப்பியுள்ளதா? அவ்வாறாயின் அதன் விவரங்கள் என்ன?

மேற்கண்ட திட்டம் தொடர்பாக தமிழ்நாடு அரசின் தற்போதைய கொள்கை நிலைப்பாடு குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் விளக்கம் கோரியிருந்தால், அதன் விவரங்கள் என்ன?



இத்திட்டம் தொடர்பாக நீடித்து வரும் நிச்சயமற்ற தன்மை, மேற்கு சென்னை பகுதியில் விமானப் போக்குவரத்து திட்டமிடல், உள்கட்டமைப்பு மேம்பாடு, முதலீடுகள் மற்றும் உள்ளூர் பொருளாதாரம் ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதா? ஏற்படுத்தியிருந்தால், அதன் விவரங்கள் என்ன?

இத்திட்டம் குறித்த தனது இறுதி முடிவைத் தெரிவிப்பதற்குத் தமிழ்நாடு அரசுக்கு ஏதேனும் காலக்கெடுவை நிர்ணயிக்க ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா? அவ்வாறெனில், அதன் விவரங்கள் என்ன?

கொள்கை சார்ந்த நீண்டகால நிச்சயமற்ற தன்மையால் குடியிருப்பாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் உள்கட்டமைப்புத் திட்டமிடல் ஆகியவை பாதிக்கப்படாமல், சென்னையின் எதிர்கால விமான நிலையத் திறன் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்ய எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன?

இதற்கு பதில் அளித்த ஒன்றிய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம், பரந்தூரில் முன்மொழியப்பட்டுள்ள புதிய விமான நிலையத் திட்டத்தை மாற்றியமைப்பது அல்லது திரும்பப் பெறுவதுதொடர்பாக தமிழ்நாடு அரசிடமிருந்து எந்தவித தகவலோ, கடிதமோ பெறப்படவில்லை என்று தெரிவித்துள்ளது. விஜய் தலைமையிலான த.வெ.க அரசு தனது தேர்தல் வாக்குறுதிகளில் பரந்தூரில் முன்மொழியப்பட்டுள்ள புதிய விமான நிலையத் திட்டத்தை அனுமதிக்கமாட்டோம் என்று கூறிய நிலையில், அவ்வாறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது ஆச்சர்யம் அளிக்கிறது!

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலை! க.வினோத் தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் எழும்பூர் வடக்கில் “போராளி ஓய்வதில்லை” மாபெரும் புகழரங்கம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி - ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப.ராணி சிறப்புரை!

சென்னை, ஆக. 7-

சென்னை கிழக்கு மாவட்டம் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் எழும்பூர் வடக்கு பகுதியில் “போராளி ஓய்வதில்லை” முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி மாபெரும் புகழரங்கம் போராளி 2 “பெண்ணுரிமை காத்த பெருந்தலைவர்! மண்ணுரிமை காத்த தமிழறிஞர்!” எனும் தலைப்பில் நாளை (08.08.2026 - சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில், சென்னை, புரசைவாக்கம், தானா தெருவில் நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.வினோத் தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ, பகுதிக் கழகச் செயலாளர்கள் சொ.வேலு எம்.சி, வி.சுதாகர் மற்றும் வானவில் விஜய், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, சுதா தீனதயாளன் எம்.சி, கோ.மணி, புரசை ஜி. தாமோதரன், வே. உமாகாந்த், க.நந்தீஸ்வரன் அ.நிர்மலா தேவி, எல்.சுந்தர்ராஜன், பரிதி இளம் சுருதி எம்.சி, கே.கோகுல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், எஸ்.தனசேகர், ஜி.ஜே.பிரபு, ஆர்.டி. சங்கர் நானா, துறைமுகம் ராக்கி, த.ஜெயக்குமார், சே.பாலாஜி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி, கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.ராணி ஆகியோர் புகழுரை ஆற்றுகின்றனர்.

இப்புகழரங்கில் மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, ப. தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றிஅழகன், ப.ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, இ.பரந்தாமன், எஸ்.மணிமுடி, சங்கரி நாராயணன், பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, சி. மகேஷ்குமார், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா மற்றும் கவிஞர் நன்மாறன், எல்.பி.எஃப். வரதன், மாவட்ட நிர்வாகிகள் தேவஜவகர், ஜி.எம். தேவன், இசட்.ஆசாத், பகுதி கழகச் செயலாளர்கள் கூ.பீ.ஜெயின், வே. வாசு, ஐசிஎப்.வ. முரளிதரன், எ.நாகராஜன், டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், பி.உதயசங்கர், சரிதா மகேஷ்குமார், ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி.பூர்ணிமா, எம்.இப்ராஹீம் கனி, இரா.கலைச்செல்வி மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பி.ஸ்ரீராமுலு, நா.ரஞ்சித் விஜயாலயன், எல்.பி.எஃப்.மோகன், நா.துலுக்கானம், கு.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.எஸ்.சித்திக், இரா.வீரமணி, ம.அசோக்குமார், பி.விஜயகுமார், பா. பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், எம். விநாயகம், சுதா தீனதயாளன், ஜி.சாந்தகுமாரி, ஜி. வி.நாகவள்ளி, எழும்பூர் வடக்கு - தெற்கு பகுதி நிர்வாகிகள் எம். தில்லைகுமார், பி.சி.சம்பத்குமார், ஜெ.கே.கருணாகரன், கே.வள்ளி, சூளை சுப்புராயுலு, டி.வி.வேலு, எம். மலர் மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், எழும்பூர் வடக்கு - தெற்கு பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள் ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், தி.தயாளன், வி.அபாய், வி.விஜயகுமார், ஆர்.பாபு, வான்மதி கதிரவன், டால்பின் எஸ்.ஹரி, கிருஷ்ணன், எஸ்.ரசூல் மற்றும் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இப்புகழரங்கில் 78 வது வட்டக் கழகச் செயலாளர் ச.மனோகர், 78 (அ) வட்டக் கழகச் செயலாளர் ந. பாலு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.